பக்கங்கள்: ஆறு

Registered as a Newspap

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 2-00

மலர்: 3 யாழ்ப்பாணம் விபவ வருடம் வைகாசி மீ 20 உவியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷவ்வால் பிறை 16 (02 - 06 - 1988 UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:95

A/L 88
Paper Class
வர்த்தகவியல்
திரு. ஜெயராமன்
Wed — 4 30 p m
Sat } 8-30 a. m.
Sun }
நிர்வாகி.
அறிவொளி கல்விக் கழகம்,
நல்லூர்.

A/L 88
பொருளியல்
திரு. லோகசிங்கம்
TUE — 9-30 a. m.
THU — 11-30 a. m.
SUN — 1-00 p. m.
O/L 87
மீட்டல் வகுப்புக்களும்
ஆண்டு 5, 6, 7, 8, 9,
10, 11 ஆம் வகுப்புக்களும்
நடைபெறுகின்றன.

## ஜே.வி.பி. விதித்த 36 மணி நேர ஊரடங்கு உத்தரவு!

கொழும்பு, ஜூன் 2

மத்திய, மேற்கு மாகாணங்களில் முப்பத்தாறு மணி நேர ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியினர் (ஜே.வி.பி) அறிவித்துள்ளனர். அவர்கள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

புதன்கிழமை இரவும் இன்று வியாழக்கிழமை முழுநாளும் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டதாம்.

மேற்கு, மத்திய மாகாணங்களில் இன்று நடைபெறும் மாகாணசபைத் தேர்தலைத் தடுக்கும் நோக்குடன் ஊரடங்கு உத்தரவு வெளியிடப்பட்டிருக்கின்றதாம்.

இதேவேளை மேற்கு, மத்திய மாகாணங்களில் உள்ள வர்த்தக நிறுவனங்கள், மற்றும் வீடுகளுக்கு தொலைபேசி மூலம் இந்த 36 மணி நேர ஊரடங்கு பற்றி சிலர் அறிவித்ததாகவும் கூறப்பட்டது.

ஊரடங்கு நேரத்தில் எவரும் வெளியே செல்லக் கூடாது என்று தொலைபேசியூடாகப் பணிக்கப் பட்டதாம். (அ-ஒ, எ)

# கொழும்பில் பெரும் குழப்பம்!

## பஸ்கள், ரயில்கள், அலுவலகங்கள் எரிப்பு
## கலகக்காரரை கண்ட இடத்தில் சுட உத்தரவு

கொழும்பு, ஜூன் 2

இன்று நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தல்களைக் குழப்பும் நோக்கத்துடன், மேற்கு மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன

ரயில்கள், பஸ்கள், கடைகள் எரிக்கப்பட்டன. பம்பலப்பிட்டியில் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் (ஊர்ஜிதமற்ற) செய்திகள் தெரிவித்தன.

வன்செயல்களை அடுத்து, குழப்பம் விளைவிப்போரைக் கண்ட இடத்தில் சுட உத்தரவிடப்பட்டது.

பெருமளவு எண்ணிக்கையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்புப்படையினர் சில இடங்களில் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்

நேற்றைய சம்பவங்களில் ஐந்து பேர் கொல்லப்பட்டனர் என அறியவந்தது

தென்னிலங்கைக்குழப்பங்கள் குறித்துக் கிடைத்த தகவல்கள் வருமாறு:

கொழும்புக்கு அருகில் இரண்டு ரயில்கள் தாக்கப்பட்டன. பஸ்களும் தாக்குதலுக்கு இலக்காகின. பெற்றோல் லொறிகளும் எரிக்கப்பட்டன. கண்டி நகரிலும் சில வன்செயல்கள் இடம் பெற்றன. செவ்வாய் இரவும் நேற்றுக் காலையும் இவ்வன்செயல்கள் இடம்பெற்றன.

தேர்தலைக் குழப்புவோர், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்போர் ஆகியோரைக் கண்டால் அந்த இடத்திலேயே சுடும்படி அரசு நேற்றுக் கடும் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

அளுத்கமையில் அரசுக்குச் சொந்தமான பெற்றோல் நிலையங்கள் நேற்று இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டன பின்னர் அவற்றுக்குத் தீவைக்கப்பட்டன.

கொழும்புக்கு வடகிழக்கே உள்ள கடுகண்ணாவை ரயில் நிலையத்தில் தரித்து நின்ற ரயில் (6ஆம் பக்கம் பார்க்க)

## ● பெரியாஸ்பத்திரியின்
# வெளி நோயாளர் பிரிவு
# மூடப்படும் அபாயம்!

— அலுவலகச் செய்தியாளர்: ஜோய் பூரணச்சந்திரன் —

யாழ்ப்பாணம், ஜூன் 2

**வடபகுதியிலேயே பெரிய ஆஸ்பத்திரியாக விளங்கும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு இப்போது உலக்கை தேய்ந்து உளிப்பிடியான நிலைக்கு வந்துள்ளது!**

நாளாந்தம் சராசரி பல நூற்றுக்கணக்கான நோயாளர்களுக்குச் சிகிச்சை அளித்து வந்த வெளிநோயாளர் பிரிவு இப்போது காறபங்கு நோயாளரையும் கவனிக்க முடியாத நிலையில் உள்ளது!!

முன்னர் 22 டாக்டர்களோடு இயங்கிய வெளிநோயாளர் பிரிவு, இப்போது ஆறு டாக்டர்களுடன் மட்டுமே செயற்படுகிறது.

நிலைமை மேலும் மோசம் அடையலாம் என்றும் வெளிநோயாளர் பிரிவுக்கு மூடுவிழா நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றும் சொல்லப்படுகிறது.

முன்னர் வெளிநோயாளர் பிரிவில் மாத்திரம் இருபத்திரண்டு டாக்டர்கள் கடமையாற்றி வந்தார்கள். இந்த எண்ணிக்கை பதின்நான்காகக் குறைவடைந்து. தற்பொழுது ஆறு பேர் என்ற நிலையில் இருக்கின்றது.

இதேவேளை நோயாளர்களின் வரவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. மிகக் குறைந்த எண்ணிக்கையான டாக்டர்கள் அதிகமான நோயாளர்களைப் பார்வையிடுவதனால் உரிய கவனம் எடுத்துப் போதிய சேவை செய்ய முடியவில்லை.

வெளி ஊர்களில் இருக்கும் நோயாளர்கள் தமக்கருகில் இருக்கும் வைத்திய சாலைகளுக்குச் செல்லாமல் பெரியாஸ்பத்திரிக்கே வருகிறார்கள்

யாழ் போதனா வைத்தியசாலை வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்குச் சேவையாற்றுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது. இங்குள்ள மருந்துகளில் பெரும் பகுதி வார்ட்டுகளுக்கே ஒதுக்கப்படுகின்றது.

வெளியூர் மக்கள் தமக்கருகில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் [6ஆம் பக்கம் பார்க்க)



முச்சந்தி முரளி

கொழும்பு குழம்பிக் கலங்குது பாத்தியளே..! லலித்தார் சொன்ன ஒப்பந்தம் புலுடா எண்டு நிரூபிக்கினமோ பின்னை...!

### தொலைத்தொடர்பு அலுவலகம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாணம் தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் பிரதேச தலைமையகம் நேற்றுத் தொடக்கம் சிறும்பியடி 'மணியம்' கட்டடத்தில் செயற்படத் தொடங்கியது.

இதுவரை காலமும் இந்த அலுவலகம் பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தியில் இயங்கி வந்தது.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான தொலைத்தொடர்பு பிரதம பொறியியலாளர் திரு எஸ். கனகசூரியர் சம்பிரதாயபூர்வமாக புதிய கட்டடத்தில் திணைக்களச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார். (ஒ-5)

மக்கள் பதற்றம்

## பருத்தித்துறை நகரில் அமைதிப்படையினர் மீது
## நேற்று கிரனேட் தாக்குதல்!

வடமராட்சி, ஜூன் 2

பருத்தித்துறையில் நேற்றைய தினம் ரோந்து சென்ற அமைதிப் படையினர் மீது இனந்தெரியாத சிலர் கிரனேட் ஒன்றை வீசினர். அது வெடித்துச் சிதறியது

அதன் விளைவாக அமைதிப்படை ஜவான்கள் இருவர் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் படுகாயத்துக்குள்ளானதாகவும் கூறப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து பருத்தித்துறை நகரப் பகுதி அமளி துமளிப்பட்டது நகரின் பல பகுதிகளிலும் வேட்டுச் சத்தம் கேட்ட வண்ணம் இருந்தது. எங்கும் ஒரே பதற்றம் நிலவியது.

நேற்றுக்காலை சுமார் 10-30 மணியளவில் பருத்தித்துறை சிவன் கோவில் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது:

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:

நேற்றுக் காலை சுமார் 10-30 மணியளவில் பருத்தித்துறை சிவன் கோவில் வீதி வழியாக அமைதிப்படையினர் ரோந்து சென்ற போது இனந்தெரியாத சிலர் படையினரை நோக்கிக் கிரனேட் ஒன்றை வீசினர். அது வெடித்துச் சிதறியது.

வெடிச் சத்தத்தைத் தொடர்ந்து பொது மக்கள் பீதியினால் அங்கும் இங்குமாக ஓட்டம்பிடித்தனர். கடைக்காரர்கள் கடைகளை மூடியும், மூடாமலும் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு விரைந்தனர் (6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிப் பகுதியில் திடீர் ஊரடங்கு!

வடமராட்சி, ஜூன் 2

வடமராட்சிப் பகுதி முழுவதும் நேற்றுப் பற்பகல் 2-30 மணிக்குப் பின்னர் திடீர் ஊரடங்கு அறிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்தே இந்தக் காலவரையறையற்ற ஊரடங்கு அமுலுக்கு வந்ததாகத் தெரியவருகிறது.

இந்த அறிவிப்பை ஒலிபெருக்கிமூலம் அமைதிப் படையினர் விடுத்தனர்.

இதேவேளை பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி, உடுப்பிட்டி, தொண்டமானாறு போன்ற பகுதிகளில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்றது பொது மக்களில் பலர் தாக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

போக்குவரத்துக்கள் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் வலையுடன் துண்டிக்கப்பட்டன. [ஒ-160]

## இன்று பஸ் சேவை இல்லை!

யாழ்ப்பாணம், ஜூன் 2

இன்று வடமராட்சியில் முழுநாள் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளதால் போக்குவரத்துச் சபை பஸ்கள் அந்தப் பகுதிகளில் சேவையில் ஈடுபடமாட்டா.

இதற்கான பணிப்பு ஒன்றை வட பிராந்திய போக்குவரத்துச் சபையின்கோண்டாவில் சாலைக்கு அமைதிப்படையினர் விடுத்துள்ளனர். [ஒ 9]

## மின் தடை

அனுராதபுரம் பிரதான மின்சார விநியோக நிலையத்தில் இருந்து புதன்கிழமை இரவு ஒன்பது மணியோடு மின் விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டது வடபகுதி முழுவதிலும் ஏற்பட்ட இந்த மின் தடையினால் இன்றைய உதயனை தாமதித்தே அச்சிட நேர்ந்தது என்பதனை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்

ஆசிரியர்

## அலம்பில் மக்களுக்கு விசேட கார்ட்!

யாழ்ப்பாணம், ஜூன் 2

முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளில் உள்ள மக்களுக்கு விசேட இலக்கங்கள் பொறிக்கப்பட்ட அடையாளக் கார்ட்டுகள் இந்திய அமைதிப் படையினரால் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அலம்பில், முள்ளியவளை, ஆண்டான்குளம் ஆகிய பகுதிகளில் இந்திய அமைதிப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தேடுதல்கள் நடைபெற்றுவரும் பகுதி மக்களுக்கே அமைதிப் படை (6ஆம் பக்கம் பார்க்க)

மேற்கு, மத்திய மாகாணங்களில்

## இன்று பாடசாலைகள் அனைத்தும் மூடப்படும்

கொழும்பு, ஜூன் 2

மேற்கு, மத்திய மாகாணங்களில் சகல பாடசாலைகளையும் இன்று (வியாழன்) மூடுவது என்று கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சுச் செயலாளர் சகல பாடசாலை அதிபர்களுக்கும் இதுபற்றி நேற்று அறிவித்தார்.

இரண்டு மாகாணங்களிலும் இன்று மாகாணசபைத் தேர்தல் நடைபெறுகிறது.

மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் எந்தப் பகுதியிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படவில்லை என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது. [ஒ-எ]

### சுபநேரம்

2—6—1988
வைகாசி 20

சுபநேரம்:
7.22 முதல் 8.52 வரை

ராகுகாலம்:
1 22 முதல் 2.52 வரை

திருஞான சம்பந்தர் குருபூசைத் தினம்

## விசேட ஜி. சி. ஈ. பரீட்சை கிளிநொச்சியிலும் நடக்கும்

### விஜயமானே உறுதி

— அலுவலகச் செய்தியாளர்; சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம், ஜூன் 2

எதிர்வரும் ஜூலை மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாக இருக்கும் விசேட ஜி சி ஈ சாதாரணதரப் பரீட்சை கிளிநொச்சி மாவட்டத்தில் தடைப்பட்ட இடங்களிலும் நடத்தப்படும்.

கல்வி அமைச்சின் செயலாளர் திரு.ஈ எல். விஜயமானே, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக் குழுவிடம் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு.த.மகாசிவம், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் திரு த பஞ்சலிங்கம் ஆகியோர் கல்வி அமைச்சின் செயலாளரைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போதே மேற்படி உறுதி அளிக்கப்பட்டதாக திரு. [6ஆம் பக்கம் பார்க்க]

நகரில் சோதனை வழமையாகிறது

## கனரக வாகனங்கள் சகிதம் நேற்று தேடுதல்

குருநகர், ஜூன் 2

நேற்று அதிகாலை குருநகர், சின்னக்கடை, சவக்காலைச் சந்தி. தொடர்மாடி, பெரிய கோவிலடிப் பகுதிகள் இந்திய அமைதிப்படையால் சுற்றி வளைக்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டன.

சோதனையில் ஈடுபட்ட இந்திய அமைதிப்படையினர் கனரக வாகனங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் வந்திறங்கினர்.

சாதாரணமாக வைத்திருக்கும் துப்பாக்கிகளுடன் தோளில் சுமந்து செல்லும் ஆர் ஜி ஷெல் போன்றவற்றையும் நேற்றைய சோதனையின் போது கொண்டு வந்திருந்தனர்.

பாங்ஷால் வீதி, கடற்கரை வீதி. சென் பற்றிக்ஸ் வீதி 4 ஆம் குறுக்கு வீதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் சோதனை நடத்தப்பட் [6 ஆம் பக்கம் பார்க்க

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### விற்பனைக்கு

சகல ரெலிவிஷன் ரியூப் Fly Back ரியூனர் மற்றும் உதிரிப்பாகங்கள் சகல நஷனல் வீடியோ டெக். செட் R F Converter, மற்றைய உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (ரெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம். (4082)

விற்பனைக்கு பாவித்த சகல வீட்டுத் தளபாடங்கள் T. V கசற் றேடியோ ஹோல் செற் சிறிய பெரிய அல்மாரி சகல காரியாலய மேசை சாப்பாட்டு மேசை கதிரைகள் Show case கண்ணாடி மேசை மற்றும் பலவித பொருட்களும் உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு M. தியாகராஜன் 326 பிரதான வீதி யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் சந்திக்கருகாமை (3411)

சாவகச்சேரி தபால் கந்தோர் அருகில் ரோட்டு முகப்பையுடையதும், குடியிருப்புக்கு வேண்டிய சகல நவீன வசதிகளடங்கியதும் நல்ல நிலையிலுள்ள 5 அறைகள் கொண்ட வீட்டுடன் நாலு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: பண்டிதர் பொன்னுத்துரை, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. [3432]

5 Cu. Ft Usha Fridge விற்பனைக்கு உண்டு நேரில் பார்த்து விலை மதிப்பிடலாம் விலாசம் S. மகேந்திரன் Hindu School Lane Kondavil West Kondavil. (3431)

### மலிவு விற்பனை

யாழ் நகரில் எங்குமே இல்லாத மலிவு விலையில் உங்களுக்குத் தேவையான புடவைகள் விற்பனையாகின்றன உடன் விஜயம் செய்யுங்கள் அங்கிலிஸ் கம்பனி மேல் மாடியில் [உதயன் சபேசருகில்] 24/1 பெரியகடை யாழ்ப்பாணம். [5286]

### உடன விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையிலுள்ள 40 ஸ்ரீ தொடர் இலக்க முடைய அசோக்லேலன் லொறி விற்பனைக்கு அல்லது மினி பஸ்ஸாக மாற்றம் செய்யவோ உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இ. பாலசிங்கம் நல்லதண்ணி வீதி [மட்டுவில் மேற்கு] நுணுவில் சாவகச்சேரி [4090]

### காணி விற்பனை

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகாமையில் குளப்பிட்டி றோட்டில் (ஆலடி வைரவர் கோவிலடி) 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு கடிதம் மூலமாகவோ, நேரிலோ தொடர்பு கொள்ளலாம் நேரில் தொடர்பு கொள்பவர்கள் வெள்ளி சனி, ஞாயிறு பிற்பகல் 1மணிக்கும் - 5 மணிக்கும்) சந்திக்கவும் தொடர்பு: இல. 46 செட்டியார் தெரு, நல்லூர். யாழ்ப்பாணம். கடிதமூலம் பெண்ணின் திருமதி சிவலோகேஸ்வரன், சிவபதி இல்லம்' மந்துவில், கொடிகாமம். (4083)

### தேவை

யாழ் நகரில் பிரபல சைவ உணவகம் ஒன்றிற்கு கடமையாற்ற சமையற்காரர்கள் தேவை. [இடியப்பம், தோசை இவை சமைக்க தெரிந்தவர்கள் விரும்பப்படுவார்] மேலும் பரிமாறுதல் போன்ற வேலை தெரிந்தவர்களும் உடனடியாகத் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும் C/o 221, உதயன் யாழ்ப்பாணம் (4085)

### புதிய நூல் விற்பனை

படிமுறைக் கணிதப் பயிற்சி ஆண்டு 9 (புதிய பாடத் திட்டம்) ஆக்கம்: கே. சி. சிவகுமாரன், வே. சந்தரலிங்கம் எஸ் பிலிப்னெரி (மத்திய கல்லூரி] கிடைக்குமிடங்கள், மகமிலன், புத்தகசாலை, டன்ஸ்ரா லடடி, சுப்பிரமணியம் புத்தகசாலை யாழ்ப்பாணம், தூர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம். நேரில் பெறுபவர்களுக்கு விசேட கழிவுண்டு. 'இ. சலபதீஸ்' (வெளியீட்டாளர்) 18B (99) 1ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம் [4088]

### இலவச நூல் போட்டி

மழைக்காலம் நாவல் வாங்கியவர்களுக்கான இலவச நூல்கள் வழங்கும் போட்டி. இறுதித் தினம் 10-6-88. "மழைக்காலம்" புத்தகத்தில் இணைக்கப்பட்டுள்ள கூப்பனை அனுப்புங்கள். 7 6-88க்கு வெளிவருகிறது. "நீலத் விரலை வைத்தால்" நாவலாசிரியர் K S ஆனந்தனின் "ராதையின் நெஞ்சம்" இனிய காதல் நவீனம தனிப்பிரதி 30/ ரூபா மாபெரும் நாவல் போட்டி விபரங்கள் புத்தகத்தில். [4086]

### வகுப்புகள்

Radio - T V Air Conditioning, Rafrigeration வயறிங் வெல்டிங் மோட்டார் மெக்கானிசம் Typing Spoken English குறுகிய கால குறைந்த கட்டணத்தில் சிறந்த செய்முறை பயிற்சியுடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன சான்றிதழ் பெறுதியானது Vispa Engineering Aid Hall 328 நாவலர் வீதி (அரைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம் (3420)

### தொழிற் பயிற்சி

Computer programming ரெலிவிஷன் வீடியோ டெக் றிப்பியறிங் எலக்ரிக்கல் வயறிங் றீவைண்டிங் வெல்டிங் பயிற்சிகள் கூடியநேர செய்முறைப் பயிற்சியுடன் நடைபெறுகின்றன. மீண்டும் ஆரம்பம். 3 6- 988 வகுப்புகளிற்கு Jaffna Technical Institute. ஸ்ரான்லி வீதி [றெயில்வே கடவை யருகாமை] யாழ்ப்பாணம். [4067]

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் எந்த வியாபாரமும் செய்ய கூடிய சகல வசதிகளும் கொண்ட இரண்டு மேல் மாடிகள் உடனடியாக வாடகைக்கு விடப்படும். தேவையானோர்கள் 106. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். [4091]

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில சகல வசதிகளும் உடைய வீடு உடனடியாக வாடகைக்கு விடப்படும் மேலதிக விபரங்களுக்கு 19, சீனிவாசகம் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணிக்குள் தொடர்பு கொள்ளவும். [4092]

நெல்லியடிச் சந்தியில் 12'X60' விஸ்தீரணமுள்ள கடை உடனடியாக குத்தகைக்கு கொடுக்கப்படும் தொடர்பு A. E. ஜெயசிங்கம் அந்திகாவியர் வேலி லடி சரஸ்வதி வித்தியாலய ஒழுங்கை கரவெட்டி. [3440]

### தவறிவிட்டது

துரை சிங்கம் ஜெயக்குமாரன் என்பராகிய எனது அடையாள அட்டை யாழ்ப்பாண வேலணை வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது து ஜெயகுமாரன், C/o A K துரைசிங்கம் வேலணை மேற்கு, வேலணையில் ஒப்படைக்கவும். (4089)

நடராசா சிவானந்தன் என்பவராகிய எனது அடையாள அட்டை இல 343101597 V. தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது நடராசா சிவானந்தன், மூளாய் கிழக்கு, சுளிபுரம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். [4096]

# நன்றி நவிலல்

## காலஞ்சென்ற திருமதி இரத்தினதேவி மண்டலநாயகம்

17-5-88 அன்று சிவபதம் அடைந்த காலஞ்சென்ற திருமதி இரத்தினதேவி மண்டலநாயகம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், எமது ஆழ்ந்துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி, மலர்வளையங்கள் அனுப்பியவர்களுக்கும், பல்வேறு விதங்களில் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிக்கிறோம்.

மேலும், அவர்கள் சுகவீனமுற்றிருந்த பொழுது, அவர்களுக்கு அன்புடனும், அக்கறையுடனும் சேவை செய்த வைத்திய கலாநிதிகட்கும். தாதிமாருக்கும், மற்றும் ஊழியருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

தனிப்பட்ட முறையில் அனைவருக்கும் நன்றி கூறமுடியாமைக்கு வருந்துகிறோம்.

இங்ஙனம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்.

[4035]

# M-3 TRAVELS

அளிக்கும்

## உடனடிப் பிரயாண ஒழுங்குகள் மத்திய கிழக்கு ★ வேலைவாய்ப்பு ★

ஆண்களுக்கு:

### ★ சவூதி அரேபியா

(1) Cobbler's (சப்பாத்து தைப்பவர்கள்)
சம்பளம் 900 S- R (7500/-)

21 வயதுக்கு மேற்பட்டோர் தொடர்பு கொள்ளலாம். இருப்பிட, உணவு, வைத்திய வசதிகள் முற்றிலும் இலவசம்.

[2] கனரக வாகன சாரதிகள்
சம்பளம் 650+100 S R

(3) Spray Labourer's [ஸ்பிறே கூலியாட்கள்]

(4) Railway Labourer's [புகையிரத கூலியாட்கள்]

(5) Supervisor's (மேற்பார்வையாளர்கள்)
மேற்பார்வையாளர்களுக்கு நேர்முகப் பரீட்சை 15-6 88இல் நடைபெறும.

(6) Cleaner's (சுத்தம் செய்பவர்கள்)

### ★ டுபாய்

(1) Tinker's (தகர வேலையாட்கள்)
[2] Spray Painter's (Car)
[3] மோட்டர், டீசல், மெக்கானிக்
சம்பளம் 700 திரும் (6300/-)

பெண்களுக்கு:

### ✱ டுபாய்

Lady Tailor's [தையல்காரப் பெண்கள்]
சம்பளம் 200 அமெரிக்கன் டொலர்ஸ்

★ சவூதி குவைத். பாரின், டுபாய், மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்கள் உடன தேவை. சிங்கப்பூருக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக செல்ல விரும்புகிறவருக்கு ஆங்கில அறிவு அவசியம்.

★ கடவுச்சீட்டு, Bond முதலியன செய்து கொடுக்கப்படும்.

★ பிரயாணம் செய்ய விரும்புகிறவர்கள் கடவுச் சீட்டுடனும் கடவுச் சீட்டு முன்பக்கப் போட்டோப் பிரதியுடனும், 10 படங்களுடனும் தொடர்பு கொள்ளவும்

★ பெண்கள் மேற்குறிப்பிட்டவைகளுடன் முழு அளவிலான கலர்ப் படத்துடனும் தொடர்பு கொள்ளவும்.

உங்கள் பிரயாணம் இனிதே நிறைவேற இன்றே நாடுங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் இதுவே

## T. இந்திரநாதன்
## M-3 TRAVEL'S

College Road, Sothy Lane,
Kankesanturai.
(பஸ் வழி இலக்கம்:- 769)

96, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

● சவூதி பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டு விட்டது கொழும்பு பிரயாணம் 4-6-88, சவூதி பிரயாணம் 7-6 88 சவூதிக்கு Passport தந்தவர்கள் உடனடியாக எனது காங்கேசன்துறை விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்

[C-5259]

## திருமலையில் 13,400 தமிழர் மீளக் குடியமர்வு

கொழும்பு ஜூன் 2 திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற 67 ஆயிரம் தமிழர்களில் 13 ஆயிரத்து 400 பேர் மீளக் குடியமர்த்தப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது

இடம் பெயர்ந்த சிங்களவர் [illegible] முஸ்லிம்களில் 500 பேரும் மீளக் குடியமர்த்தப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ எ)

## பொறிவெடி

புதுக்குடியிருப்பு. ஜூன் 2 புதுக்குடியிருப்பு வீதி அருகில் கிடந்த பொலித்தீன் பையை எடுக்கச் சென்ற மீன் வியாபாரி ஒருவர் பொறி வெடிக்கு இலக்கானார்.

ஆசிர்வாதம் (45 வயது) என்பவருக்கே இப்பரிதாப நிலை ஏற்பட்டது (இ-ரி)

## செயலகம் மீண்டும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம். ஜூன் 2 யாழ் செயலகம் மீண்டும் ஸ்தம்பிதமடைந்தது

விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாக சேவைப் பின்கீழ் செயலகம் இயங்குவது தடைசெய்யப்பட்டதும், மாதத்தின் சனி வாரத்தில் இயங்க அனுமதிக்கப்பட்டதும் தெரிந்ததே.

இதுவரையில் யாழ் செயலகத்தில் கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் நேற்றுவரை அத்தியாவசிய சேவைப் பிரிவுகள இயங்கி வந்தன

மீண்டும் செயலகம் இம்மாதம் கடைசி வாரம் இயங்க ஆரம்பிக்கும். (ஒ-9

## துக்கம் அனுஷ்டித்து ஹர்த்தால்

கரவெட்டி ஜூன் 2 கடந்த 27 ம் திகதி வடமராட்சிப் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால், அண்மையில வீரமரணம் அடைந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்களான நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர் மேஜர் மாஸ்டர், முரளி சார்ல்ஸ் பட்சம் ஜவாகர் ஆகியோரின் மறைவுக்குத் துக்கம் அனுஷ்டிக்கும் விதத்திலேயே நடத்தப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-70)

## கனடா உதவி

திருகோணமலை. ஜூன் 2 கனேடிய அரசாங்கம் திருக்கடலூர் மீனவர்களுக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான 10 பிளாஸ்ரிக் மீன்பிடிப்படகுகளை வழங்கியுள்ளது. வலை, மீன்பிடி உபகரணங்கள் ஆகியனவும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (ஒ-150)

## வின்ஸர் வெண்திரையில்

10 30, 2-30, 4 15

### 007 James Bond
SEAN CONNERY
IN

# DR. NO.

பல ரசிகர்கள் வேண்டுகோளுக்கிணங்க குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்

அடுத்த வெளியீடு

விசுவின்

"தாய்க்கு ஒரு தாலாட்டு"

(C 5287)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 - 07 - 1927

மறைவு: 17 - 05 - 1984

திதி: 02-06-1988

### திருமதி இராசையா மகேஸ்வரி

நான்காண்டு சென்றதம்மா
நாமின்னும் ஆறவில்லை
நாவறண்டு அழுகின்றோம்
நம்மனமும் ஆறவில்லை
நம்மினிய அம்மாவின் வழி
காட்டலை வேண்டி
நல்லிதயம் கொண்ட அனைவருமே
வேண்டுகிறோம்.

தகவல்: த சி இராசையா
[மதராஸ் யுவலறி மாட்]
கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

நந்தாவில் அம்மன் வீதி.
கொக்குவில்.

[3439]

## வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

### ★ Computer Programming in Basic Language

பயிற்சிக்காலம்: 40 நாள்
ஆரம்பம்: 03 - 06 - 1988 (திங். புதன், வெள்ளி, வகுப்புகள்)
கட்டணம்: 750/- மாத்திரம் (இருபிரிவுகளாகச் செலுத்தலாம்)

O/L படித்த எவரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சி முடிவில அங்கிகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### ★ Computer Diploma

Computer Programming in Basic and Cobol Language.

பயிற்சிக் காலம்:- 6 மாதம்.
குறிக்கப்பட்ட தொகை மாணவ, மாணவிகளே சேர்க்கப்படுவார்கள்; ஆகையால், விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று, பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்:- 02 - 06 - 1988.

## UNIKCO COMPUTER CENTRE,

No: 5 மின்சாரநிலைய வீதி, 2-ம் ஒழுங்கை,
(உபதபாற்கந்தோர் அருகாமை)
யாழ்ப்பாணம். (C 5241)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு

# பிரயாண ஒழுங்குகள்

## (M. கீதபொன்கலன்)

★ குவைத் ★ சவூதி அரேபியா ★ டுபாய்

மேற்குறிப்பிட்ட நாடுகளில்
ஆஸ்பத்திரி கிளீனர்ஸ், எயார்போட் கிளீனர்ஸ், லேபரர்ஸ், மேசன், காப்பென்ரர், றூம் போய், வெயிட்டர், செக்கியூரிட்டிகார்ட், ட்ரைவர், மெக்கானிக், இலக்ரீஷியன். போன்ற வேலைகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.

தரமான வேலை- நியாயமான சம்பளம்.
இரண்டு வருட ஒப்பந்தம், உணவு, தங்குமிடம், வைத்திய பராமரிப்பு யாவும் இலவசம்.

பாஸ்போட், 10 படம், போட்டோஸ்ரட் பிரதிகளுடன் நேரில் வரவும்.
குறிப்பு: முகவர் ஊரில் இருப்பதால் உடனே நேரில் வந்து சந்திக்கவும்.

## M. Geethaponkalan

முகவரி :
இலங்கைமாதா லேன்,
சில்லாலை கிழக்கு,
பண்டத்தரிப்பு,
[4025]

கொழும்பு முகவரி :
Faza Villa,
25/5, Central Road,
Colombo-12.
T. No 2196g


# குடாநாட்டுக்குள் எப்பகுதியிலாவது இடம் ஒதுக்கித்தருக

## பலாலியில் நிலம் இழந்தோர் ஜனாதிபதிக்கு மகஜர்

காங்கேசன்துறை ஜூன் 2
பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் சொந்த வீடு வாசல்களையும், விவசாயநிலங்களையும் இழந்து கடந்த 3 வருடங்களாக நிவாரணம் எதுவும் இன்றி கஷ்டமுறும் எமக்கு குடாநாட்டுக்குள் எந்த இடத்திலாவது காணி வழங்கி நாம் குடியிருக்கவும், விவசாயம் செய்யவும் உடனடியாக உதவுங்கள்.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள் மேற்கண்டவாறு ஜனாதிபதிக்கு அவசர வேண்டுகோள் ஒன்றைவிடுத்துள்ளனர்.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்ட 285 குடும்பங்களின் அவல நிலை குறித்து ஏற்கனவே பல பொதுஸ்தாபனங்கள் குரல் எழுப்பியும் அவர்கள் விடயத்தில் இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கை எதுவும் மேற் கொள்ளப்படவில்லை.

இதை அடுத்து பாதிக்கப்பட்ட மக்கள் சுமார் 250 பேர் வரை கையெழுத்திட்டு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் மயிலிட்டி வடக்குப் பகுதியில் வசித்து விவசாயத்துக்கு உகந்த செம்மண் காணிகளில் வுவசாயம் செய்து வந்த 1054 அங்கத்தவர்களைக் கொண்ட 285 குடும்பங்கள 1986 மார்ச் மாதம் திடீரென வெளியேற்றப்பட்டனர். அவர்களது வீடுகள் உடைக்கப்பட்டு விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டன.

அக்காலப்பகுதியில் இருந்து இன்று வரை இந்தமக்களுக்கு அரசோ, வேறு எந்த புனர்வாழ்வு ஸ்தாபனங்களோ எவ்வித நிவாரணங்களையும் வழங்கவில்லை. குடியிருக்கவும் விவசாயம் செய்யவும் முடியாத நிலையில் இம் மக்கள் பெரிதும் கஷ்ட முறுகின்றார்கள்.

உடனடியாக இம்மக்களின் துயர் துடைக்க ஆவன செய்யப்படவேண்டும்.

★ குடா நாட்டுக்குள் பொருத்தமான இடத்தில் இம்மக்கள் குடியேறி விவசாயம் செய்ய காணி வழங்கப்பட வேண்டும்.

★ கஷ்ட நிவாரண மாக 1000 ரூபா பெறுமதியான உணவு முத்திரை வழங்கப்படவேண்டும்.

★ விவசாயத்தை தொடர விவசாய உபகரணங்கள், உரவகைகள் மற்றும் உதவிகளைச் செய்து தரவேண்டும்.

★ அல்லது முன்னைய இடங்களில் பாதுகாப்புப் படைகளின் தலையீடின்றி குடியேறி விவசாயம் செய்ய அனுமதிக்கவேண்டும்

மேற்கண்டவாறு மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-68)

## சேவை நலம் பாராட்டுவிழாவில் உரை

## "மனம் கோணாமல் கற்பிக்கும் ஆசிரியரே நன்மதிப்பைப் பெறலாம்"

யாழ்ப்பாணம் ஜூன் 2
"மனம் கோணாமல், பொறுமையுடன் மாணவர்களது நிலை அறிந்து கற்பிக்கும் ஆசிரியர்களே மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர்களிடத்திலும் சமுதாயத்திலும் நன்மதிப்பைப் பெறுகின்றார்கள். இத்தகைய ஆசிரியர்களை மாணவர்கள் என்றுமே மறந்து விடுவதில்லை. அவர்களது வாழ்வின் உயர்வுக்கு இவர்களே பெரும் வழிகாட்டியாகவும் இருக்கிறார்கள்"

இவ்வாறு ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை அதிபர் திருமதி பா. கந்தசாமி குறிப்பிட்டார்.

பிரஸ்தாப பாடசாலையில் முப்பத்து ஏழு வருடகாலமாக சேவையாற்றி ஓய்வுபெறும் ஆங்கில ஆசிரியை திருமதி பொன்மலர் கிறிஸோலோககக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்திற்குத் தலைமை வகித்து அவர் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தமது உரையில்—

"மாணவர்களிடத்தில் ஆங்கில அறிவை வளர்த்துவிடுவதில் திருமதி கிறிஸோலோகஸ் பெருமளவு அக்கறை காட்டியதோடு பாடசாலை வளர்ச்சியிலும் கணிசமான பங்கினை ஏற்று செயல்பட்டார் இப் பாடசாலையின் சரித்திரத்தில் நிச்சயமாக அவரது பெயர் இடம்பெறும்" என்றும் குறிப்பிட்டார்.

பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு எ. வரதராசா முன்னாள் பொலிஸ் அதிகாரியும் பழைய மாணவருமான திரு. எம் பேரின்பநாயகம், கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. த. அந்தோனிப்பிள்ளை ஆகியோரும் ஓய்வு பெறும் ஆசிரியையின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.

## மீண்டும் திருமலைக்கு

திருகோணமலை, ஜூன் 2
இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய அகதிகளில் 212பேர் திருகோணமலைக்கு வந்துள்ளனர்.

கப்பலில் மன்னாருக்கு வந்து அங்கிருந்து பஸ் மூலம் அவர்கள் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளனர்.

குச்சவெளி, 10 ஆம் குறிச்சி, திருக்கடலூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவர்கள்.

இவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகளைத் திருகோணமலை மாவட்ட புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

(ஒ-150)

## கலை அருவி வெளியீடு

அட்டன் ஜூன் 2
கொட்டகலை யதன்சைட் தோட்டத்தில் அமைந்துள்ள அரசினர் ஆசிரியர் கலாசாலையில் கலாசாலை வெளியீடான 'கலை அருவி' நூல் வெளியீட்டு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது கலாசாலை முதல்வர் திரு. ந. நடராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

(இ-58)

## அல்லாரையில் கொள்ளை

கொடிகாமம், ஜூன் 2
அல்லாரையில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இரவில் ஆயுதபாணிகளாகச் சென்ற கொள்ளைக் கோஷ்டியினர் நகைகள், பணம் உட்பட ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளை அடித்தனர்.

அங்கு மற்றுமொரு வீட்டில் கொள்ளையடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

கொள்ளையர் தப்பிச் செல்லும்போது "கிரனேட்" எறிந்து சென்றனர். ஆனால் சேதம் ஏற்படவில்லை

(இ-75)


# LONDON EXAMS

## NOV - DEC 1988

★ Weekend Classes ★

ஆரம்பம்: 05 - 06 1988

| பயிற்சி நெறி | | முழுக்கட்டணம் |
|---|---|---|
| CIMA Stage I | - | ரூபா 800/- |
| IDPM I | | " 600/- |
| AAT [Sri Lanka] Stage I [English or Tamil Medium] | | " 300/- |
| [BOTH] | | " 500/- |
| I A B Foundation | - | " 50/ |
| INTER | | " 100/- |
| FINAL | - | " 200/- |

AAT (SRI LANKA) STAGE II
ஆரம்பம்: 16. 07. 1988

நகைமை, திறமை, தகுதி, அனுபவம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எல்லாம் ஒருங்கே நிறைந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்கள்:

| | |
|---|---|
| B. மரியாம்பிள்ளை | A. ஏரம்பு |
| S நாதன் | S உமாகாந்தன் |
| W. J குசைரட்ணம் | E ரட்ணம் |
| S. கோமஸ் | B ராஜ்குமார் |
| S. கனகசுந்தரம் | G சிறிதரன் |

● எமது விரிவுரையாளர்கள் வேறு எந்த நிறுவனத்திலும் கடமை புரியமாட்டார்கள்.

கொம்பியூட்டர் வகுப்புகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

★ அச்சடித்த பாடக் குறிப்புகளும் வினா விடைகளும் இலவசம்

★ எல்லாப் பரீட்சைகளுக்குமான மாணவர் பதிவுகள் [Student Registration] செய்து கொடுக்கப்படும்

மேலும் விபரங்கட்கு :

# HARVARD INSTITUTE

SUCCESSORS OF
Cantabia Institute
(Sister Organisation of Oxonia Institute)
No 21, MAIN STREET
JAFFNA.
(C-5264)

★ வியாபாரம் பெருக
★ விளம்பரம் செய்க



## பிறந்த தின வாழ்த்து



செல்வன்
### பிறைசூடி கமல்ராஜ்

காங்கேசன்துறை காட்டடைப்பு வீதியைச் சேர்ந்த பிறைசூடி சுகந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கமல்ராஜ் இன்று 02-06-88ல் தனது முதலாவது பிறந்த தினத்தை வெகுவிமரிசையாக் கொண்டாடுகின்றார்

இவரை அப்பா, அம்மா, மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோர் பல்லாண்டு, பல்கலையும் பெற்று சிறப்புடன் வாழ செல்வச் சந்நிதி முருகனை வேண்டி வாழ்த்துகின்றனர்.

(3810)



16வது வட- இந்திய காசி ஹரிதுவார் ரிஷிகேச யாத்திரை
மற்றும் மதராஸ், சிதம்பரம், மதுரை, திருச்சி, இராமேஸ்வரம்
ஆரம்பம்: 14-08 88, முடிவு: 04-09-88
கட்டணம்: ரூபா, 3980/-
விபரங்கட்கு:
### விநாயகா டூர்ஸ்
அதிபர்; அ. வி. அருணாசலம்
இராஜநாயகி தியேட்டர்,
காங்கேசன்துறை.
கிளை: அரு சந்திரமோகன்
[illegible]
வெள்ளவத்தை,
[illegible] (2 027)



# டுபாய்

## உடனடி வேலைவாய்ப்புகள்

### அரசாங்க கட்டிட வேலைத்திட்டம்

| | | எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| 1. | சிவில் என்ஜினியர் | 2 | 900 | US$ |
| 2 | மெக்கானிக்கல் என்ஜியர் | 2 | 800 | .. |
| 3. | எலெக்றிக் என்ஜினியர் | 2 | 900 | ,, |
| 4. | காம்ப் பொஸ் என்ஜினியர் | 2 | 500 | ,, |
| 5 | சிவில் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 6 | மெக்கானிக்கல் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 7 | எலெக்றிக்கல் மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 8 | தச்சுவேலை மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 9. | கம்பிவேலை மேற்பார்வையாளர் | 5 | 400 | ,, |
| 10. | கார் மெக்கானிக் | 2 | 350 | ,, |
| 11 | அளவையாளர் | 2 | 400 | ,, |
| 12 | நேரக்கணிப்பாளர் | 3 | 350 | , |
| 13. | உதவி நேரக் கணிப்பாளர் | 5 | 300 | ,, |
| 14. | மேசன் (F) | 5 | 275 | ,, |
| 15. | மேசன் [R] | 10 | 250 | ,, |
| 16. | உதவி மேசன் | 15 | 175 | ,, |
| 17 | தச்சுவேலையாளர் [F] | 5 | 275 | ,, |
| 18. | தச்சுவேலையாளர் [R] | 10 | 250 | ,, |
| 19 | உதவி தச்சுவேலையாள் | 15 | 175 | ,, |
| 20. | வெல்ட் மான் | 10 | 250 | ,, |
| 21. | உதவி வெல்ட் மான் | 15 | 175 | ,, |
| 22 | கம்பி வளைப்போர் | 10 | 250 | ,, |
| 23 | உதவி கம்பி வளைப்போர். | 15 | 175 | ,, |
| 24 | பிளம்பர் | 10 | 250 | ,, |
| 25. | உதவி பிளம்பர் | 15 | 175 | ,, |
| 26. | குளிரூட்டல் ரெக்னீசியன் | 5 | 350 | ,, |
| 27. | குளிரூட்டல் சென்றலேஸ் | 10 | 350 | ,, |
| 28. | பெயின்ரர் (கட்டடம்) | 10 | 250 | ,, |
| 29. | உதவி பெயின்ரர் | 15 | 175 | ,, |
| 30. | எலெக்றீஷியன் (வீட்டு) | 10 | 275 | ,, |
| 31. | உதவி எலெக்றீஷியன் | 15 | 200 | ,, |
| 32. | வெல்டர் | 10 | 250 | ,, |
| 33. | உதவி வெல்டர் | 15 | 175 | ,, |
| 34. | தொழிலாளர் | 35 | 175 | ,, |
| 35. | கணக்காளர் | 1 | 400 | ,, |
| 36. | உதவி கணக்காளர் | 2 | 300 | ,, |
| 37. | ஸ்ரோர் கீப்பர் | 1 | 400 | ,, |
| 38. | உதவி ஸ்ரோர் கீப்பர் | 2 | 300 | ,, |
| 39 | கார் பெயின்ரர் | 5 | 300 | ,, |
| 40. | L. V. றைவர் | 7 | 250 | ,, |
| 41. | H. V. றைவர் | 3 | 300 | ,, |
| 42. | H. V. ஒப்பிரேற்றர் | 5 | 350 | ,, |
| 43. | சமையலாளர் | 2 | 320 | ,, |
| 44. | உதவி சமையலாளர் | 6 | 200 | ,, |
| 45. | சுத்தோர் உதவியாளர் | 10 | 200 | ,, |
| 46. | துப்பரவாக்கிகள் [விமானநிலையம்] | 100 | 200 | ,, |

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

K. லிங்கம்
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

A. தவச்செல்வம்
நெல்லியான் வீதி,
சுழிபுரம்.

[C 5265]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



தாயின் மடியில்:
21 - 11 - 1965

அந்நியர் அழிப்பில்
20 - 04 - 1988

அந்தியேட்டி: 03-06-1988

**சி. செல்வராஜன் [ரஹீம்]**

(செல்வச்சந்நிதி கோவிலடி தொண்டமானாறு)

அந்நியரின் ஆக்கிரமிப்பிலிருந்து தாயக மண்ணும் தமிழீழமதனை மீட்டெடுக்கவென வீறுகொண்டெழுந்த வீர வேங்கை வீர மறவா ரஹீமே! — நீ விட்டுச்சென்ற பாதையில் தொடர்வோம் உன் எண்ணம் ஈடேறும் நாள் தொலைவிலில்லை!

உன் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்
சகோதரர், சகோதரிகள்,
நண்பர்கள், மற்றும்,
உற்றார், உறவினர்கள்.
(3871)

## முதலாம் ஆண்டு நிறைவு நினைவஞ்சலி



**கனகசபை முருகதாஸ்**
**[நிக்ஸன்]**

தாயின் மடியில்: 19-8-1967
தாயக மண்ணில்: 2-6-1987

நித்திய உலகின் நிதர்சன வீரன் நீ
அடிமைத்தனத்தின் விலங்கினையுடைத்
தெறிந்து
பிறந்த மண்ணின் பெருமைதனை உலகறிய
சரித்திரம் படைப்பேன் என விருப்புடன்
புறப்பட்டாயே
முருகா!

நீ சென்ற விடுதலைப்பாதையிலே குறுக்கிட்ட அரக்கர்கள் உனைக்கவர்ந்து சென்று ஓராண்டுகாலம் நிறைவு பெறும் இந்நாளில் உன்பிரிவால் துவண்டு துயருற்று வேதனையில் மூழ்கி நிற்கும் உன் பெற்றோர்கள் உற்றார் உறவினர் நண்பர்கள் சேர்ந்து உன் நினைவை இறைவனுக்கு அர்ப்பணித்து இறைஞ்சுகிறோம்.

தந்தை, தாய், சகோதரன், சகோதரி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (3501)

## உடன் தேவை

நன்கு அனுபவமுள்ள லேத்மன் கம்மாலை வேலையும், வெல்டிங் வேலையும் தெரிந்த வெல்டர் உடன் தேவை. நேரில்வரவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

**பிரான்சிஸ் வேக்ஸ் சென்ரர்,**
பிரதான வீதி,
பருத்தித்துறை

**ராஜன் சைக்கிள் வேக்ஸ்,**
பிரதான வீதி,
பருத்தித்துறை [4005]

## வெளி வந்துவிட்டது
# தேசிய வருமானம்

ஆக்கம்:
**மா. சின்னத்தம்பி**
B. A., B. Phil (Hons)
(வலய ஆலோசக ஆசிரியர்)

புதிய பாடத் திட்டக்கணக்குகளை உள்ளடக்கியது.

வணிக மஞ்சரி வெளியீடு
"மகா லக்ஷ்மி"
அம்மன் கோயில் மேற்கு ஒழுங்கை
சுதுமலை　　மானிப்பாய்

விலை: ரூ. 20/-

பாடசாலைகட்கும், தொகைக் கொள்வனவுக்கும் விசேட கழிவு. [4017]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு　10 - 11 - 1934
உதிர்வு　2 - 6 - 1987

**திரு: க. நடராஜபிள்ளை**
[தேசிய சேமிப்பு வங்கி]

நீங்கள் இல்லாமல் ஆண்டொன்று மறைந்து விட்டதே இன்னும் எத்தனை ஆண்டுகள் வந்து மறைந்தாலும் உங்கள் நினைவு எம் மனத்தை விட்டகலாது.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.

இடைக்காடு,
அச்சுவேலி. (4020)

## விக்ரர் அன் சன்ஸ் [விக்ரேஸ்]

இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனத்திலுள்ள வெற்றிடங்கள்

- ★ றெக்கோடிங் பார்
- ★ மோட்டார் றிவைன்டிங்
- ★ மின்சார உபகரணங்கள் திருத்துதல்
- ★ றேடியோ திருத்துதல்
- ★ மணிக்கூடு திருத்துதல்.

முதலிய எல்லா தொழில்நுட்ப பகுதிகளிலும் தொழில் பழக விரும்புவோரும் தொழில் தெரிந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விக்ரர் அன் சன்ஸ் [விக்ரேஸ்]**
(C5273)

## 4வது ஆண்டு நினைவஞ்சலியும் சிரார்த்ததினமும்



**தெய்வேந்திரன் தம்பிரசா**

அன்னையின் மடியில்　12-7-56
அநியாய வழியில்　17-5-84


திதி: 2 - 6 - 88

அன்பின் திருவுருவே பண்பின் பிறப்பிடமே பாசத்தின் சிகரமே குடும்பத்தின் ஒளிவிளக்கே: உம்மை பிரிந்து 4ஆவது ஆண்டு சென்றும் பிரிவால் வாடுகின்றோம். உமது ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தாய், சகோதரர்

கொம்மந்தறை
வல்வெட்டித்துறை. (4022)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**நாகமுத்து விஜயேந்திரன்**

அன்னையின் மடியில்: 10-9-1959
காலன் கையில்: 11-6-1987

எமது அன்புத் தெய்வமே!

குடும்பத்தின் குலவிளக்கே! அரக்கர்கள் உங்களை காலி என்னும் இடத்திற்கு இழுத்துச் சென்று மீள வருவீர்கள் என்று வழியை விழி பார்த்திருந்த எம் கண்களில் மண் தூவிவிட்டு எங்கு சென்றீர்களோ நாம் அறியோம். நீண்ட நெடுங்காலம் கூடிக் குலவி வாழ நம்பி இருந்த எங்களிடமிருந்து கண்ணிவெடி எனும் வடிவில் வந்த காலன் உங்களை பிரிப்பான் என்று நாம் அறிந்தோமோ? இப்படி எங்களை பாதி வழியில் தவிக்க விட்டுச் சென்றீர்களே! ஒருவருடம் என்ன நூறு வருடம் சென்றாலும் எமது உள்ளத்தில் உங்கள் நினைவு நீங்காது உங்கள் ஆத்ம சாந்திக்காக எப்பொழுதும் பிரார்த்திப்போம். நேற்று நடைபெற்ற அன்னாரின் நினைவஞ்சலியின் போது கலந்து கொண்ட சகலருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

அன்பு மனைவி, தாய், சகோதரர்கள்,
சகோதரி, உறவினர்கள், நண்பர்கள்.

பாரதி பவன்,
ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (4026)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னத்தம்பி சிவஞானரத்தினம்**
**[சின்னராசா S. S. R]**

மலர்வு: 8-1-1926
உதிர்வு: 8-6-1982

திதி: 2-6-1988

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய் எம் நெஞ்சமெல்லாம் நிலைத்திருந்த குலவிளக்கே. எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட குலவிளக்கே. உங்கள் நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி,
அருமைச் செல்வங்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை, சகோதரங்கள்,
மைத்துனர்கள், உறவினர்கள்,
நண்பர்கள், ஊழியர்கள்.

ஐயனார் கோவிலடி,
[illegible] மேற்கு,
[illegible]. (4019)


# உடனடி வேலைவாய்ப்பு

**KUWAIT CLEANERS　KUWAIT DRIVERS**

குவைத் கிளீனேர்ஸ் 700 பேர் உடன் தேவை
குவைத் றைவர்ஸ்　வயது 18 — 49 வரை

பாஸ்போட்டும், 3 பாஸ்போட் சைஸ் படமும், அனுபவச் சான்றிதழ்கள்.
குவைத் றைவர்களுக்கு மத்திய கிழக்கு நாட்டில் தொழில் பார்த்த Licence தேவை.
Saudi Arabiaவில் ALHUDARI COMPANYக்கு Drivers, Cleaners உடன் தேவை.
Drivers;- 100 பேர், சம்பளம் 600+150 SR, வயது 21 — 49 வரை.
Cleaners;- சம்பளம் 400 SR வயது 21 — 48 வரை

## Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1 Cleaners | 2 Carpenters | 3 Mason | 4. Electrician |
| 5 Plumber | 6 Welder | 7 Tinker | 8. Spray painter |
| 9. Lathemen | 10. Auto Electrician | 11 Clerk | 12 Supervisior |
| 13 Civil Engineer | 14 Mechanical Engineer | 15 Electrical Engineer | 16 Electronic Engineer |
| | 17. Mechanic | 18. A C. Mechanic | 19 Drivers. |

வயது 21 — 50 வரை

30-6-88க்கு முன் பயணம் செய்யலாம் போக விரும்புவோர் Passport, 3 Passport சைஸ் படங்கள், சான்றிதழ்களுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் Saudi, Singapore, Dubai, Abudhabi, Kuwait இவ்விடங்களிற்கு House-Maid ஆக போக விரும்புவோர்க்கும் அவற்றிற்குரிய முழு ஒழுங்குகளும் செய்து கொடுப்போம், செல்ல விரும்புவோர், பாஸ்போட், 3 பாஸ்போட் சைஸ்படம், 1 முழு கலர்படம் இவையாவற்றுடனும் எமது காரியாலயத்தில் போவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யவும்.

மு. கு :- முற்பணம் அறவிடமாட்டோம் தங்களுக்குரிய Visa பெறுத் தந்த பின்னர் அச்செலவுத் தொகையை பெற்றுக்கொள்வோம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 7-00 மணி தொடக்கம் பி. ப. 1-00 மணி வரை

# T. V. Travels & Tourist

**Brown Road,**
**(Kokuvil Railway Station Front)**
**KOKUVIL.**

[C5250]　BRANCH:- Courts Road, Mallakam.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

இறையுணர்வு அற்ற மனித சமுதாயம் வரையறையற்ற விலங்குகள் வாழும் வனமாகும்.
— பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா.

**உதயன்**

இல: 298/8 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22075
02-06-1988

## கோமாரி ஆபத்து

கிழக்கில் இருந்து வடக்கு வரை என்று கூறுமளவுக்கு, கோமாரி எனப்படும் பயங்கரக் கால்நடை நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. இது குறித்துக் கால்நடை அபிவிருத்தி, சுகாதாரத் திணைக்களம் கடும் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. கால்நடைகளுக்கும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்துகளை அது விளக்கி உள்ளது.

கோமாரி நோய் கண்டால் ஆடுகள், மாடுகள் மரணிப்பது நிச்சயம். அந்த நோய் பரவாமல் தடுப்பதே ஒரே ஒரு வழி என்று கால்நடை வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

கால்நடை வளர்ப்பு, கிழக்கு முதல் வடக்கு வரையான தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதாரத்தில் முப்பது சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் பங்கு வகிக்கிறது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கோமாரி என்னும் கொடுநோய் பரவினால் ஏற்கனவே நலிவு கண்டிருக்கும் ஈழத்தமிழர் பொருளாதாரம் மேலும் பாதிப்புறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கோமாரிப் பயங்கரம் கடந்த நாற்பது வருடங்களாக எமது பகுதியில் இருக்கவில்லை. எங்காவது சிறு அளவில் வந்தால் உடனுக்குடன் கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இம்முறை கட்டுப்படுத்துவது கஷ்டம் என்ற வகையில் பொத்துவில் தொடக்கம் காங்கேசன்துறை வரை பரவி வருகிறது.

வடக்கு, கிழக்கில் கிராமத்துக்குக் கிராமம் நிறுவப்பட்டிருக்கும் அமைதிப்படை முகாம்களுக்கு இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் ஆடுகள் மூலமே கோமாரி இந்தளவு வேகமாகப் பரவி வருகிறது என்பதே கால்நடை வளர்ப்பு, பராமரிப்பு அதிகாரிகளின் கருத்து.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படும் ஆடுகள் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டதா, செய்யப்படுகிறதா என்பதை அமைதிப்படை அதிகாரிகள் தான் தெளிவுபடுத்த வேண்டும்.

கோமாரியைத் தடுக்கத் தேவையான மருந்து வகைகள் வடக்கு, கிழக்குக்கு வரவில்லை; அல்லது போதிய அளவு இல்லை என்பது பெருங்குறை. கண்டியில் இருந்து மருந்து வகைகளை அனுப்புவதற்கு அங்குள்ள அதிகாரிகள் சாக்குப்போக்குகள் கூறிப் பின்னடிக்கிறார்கள்.

அமைச்சர் தொண்டமான் கால்நடை வளர்ப்பை மேம்படுத்த வேண்டும் என்று திட்டங்கள் வகுக்கிறார். ஆனால் தமிழ்ப் பகுதிகளில் தீவிரமாகப் பரவும் கோமாரியைக் கட்டுப்படுத்த மருந்து அனுப்புகிறார்கள் இல்லை கண்டி அதிகாரிகள்!

கால்நடை அபிவிருத்தி, தமிழ்ப் பகுதிகளுக்குத் தேவை இல்லை என்று நினைக்கிறார்கள் போலும். சலுகை ஒரு பக்கம் வாட்டம் மற்றப் பக்கம் என்ற நிலை. அமைச்சர் தொண்டமானுக்கு இது சமர்ப்பணம். அவரது நிர்வாகத் திறமைக்கு ஒரு சவாலும் ஆகும்.

கோமாரி கண்ட கால்நடைகளை இறைச்சியாக்கி உண்பது மனித சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் ஆகையால் இறைச்சி உண்போர் இது குறித்து விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.

இப்போது சிவில் நிர்வாகம் சீராக இயங்கவில்லை. ஆகவே ஒரு மாவட்டத்திலிருந்து மற்ற மாவட்டத்துக்கு கால்நடைகளைக் கொண்டு செல்ல உரிய அதிகாரிகளின் உத்தரவு பெற வேண்டும் என்ற கட்டுப்பாடு காற்றில் பறக்கிறது. நோய் கண்ட கால்நடைகளை இறைச்சிக்கு வெட்டப்பட வேண்டும் என்ற சட்டவிதி குறித்துச் சட்டை செய்வார் எவருமில்லை.

இதனால், நோய் கண்ட கால்நடைகளை இறைச்சியாக்கி காசு சேர்ப்போர், மக்களுக்கு நோய் சேர்ப்போர் குறித்து மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவ்வேளையில் இறைச்சி உண்பதை நிறுத்தி விடுவதே மக்கள் நோயாளிகளாகும் பேராபத்தைத் தடுக்க நல்லவழி.

சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருப்பதைத் தமக்குச் சாதகமாகக் கொள்வோருக்கும், சட்டத்தைச் சட்டை செய்வோருக்கும் இறைச்சியை வாங்காமல் விடுவதன் மூலமே பாடம் புகட்டலாம்.

கோமாரி ஆபத்திலிருந்து தப்புவதற்கு கால்நடை வளர்ப்போர், அதிகாரிகள், பொது மக்கள், அரசு ஆகிய நான்கு தரப்பினரும் விழிப்பாக இருக்க வேண்டும். வேகத்தோடு ஒரு முனைப்புடன் செயலாற்ற வேண்டும்.

### சட்டசபை கலைப்பு!

சிந்து மாகாணம், பலுசிஸ்தான் மாகாணம் ஆகியவற்றின் சட்டமன்றங்களையும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் கலைத்துவிட்டார்.

எதற்காக இச்சட்டமன்றங்கள் 1985 இல் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை என்று பாகிஸ்தான் அரசு, கலைப்புக்குக் காரணம் காட்டியுள்ளது. (எ)

பலஸ்தீனம்:

# தாயகம் மீட்கும் போராட்டம் புதிய பரிமாணம் பெறுகின்றது

## இதுவரை 277 போராளிகள் பலி!

## ஐயாயிரம் பேர் காயம்

ஜெருசலம், ஜூன் 1

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களை மீட்கும் போராட்டத்தில் 277 பலஸ்தீனப் போராளிகள் இதுவரை உயிரிழந்தனர்.

ஐயாயிரம் பலஸ்தீனியர்கள் வரை காயமடைந்தனர். பத்தாயிரம் பேர் சிறையில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

1967 அரபு-இஸ்ரவேல் படைகள் காஸா, ஜோர்தானின் மேற்குக் கரையோரப் பிரதேசம் ஆகியவற்றைக் கைப்பற்றின.

அந்த அரபுப் பிரதேசங்களில் இஸ்ரவேல் அரசு யூதர் குடியேற்றத் திட்டங்களை அமைத்து வருகின்றது.

இப்பிரதேசங்களை மீட்டெடுக்கும் கிளர்ச்சியை பலஸ்தீனப் போராளிகள் கடந்த டிசம்பரில் ஆரம்பித்தனர். இன்னும் கிளர்ச்சி நீடித்து வருகின்றது.

இப்போது கிளர்ச்சிக்குப் புதிய பரிமாணம் அளிக்க பலஸ்தீனிய விடுதலை இயக்கம் தீர்மானித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் வாழும் பலஸ்தீனியர்கள் சட்ட மறுப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

இஸ்ரவேல் உற்பத்திகளை வாங்காமல் பகிஷ்கரிப்பது, இஸ்ரவேலிய வர்த்தக நிலையங்களைப் புறக்கணிப்பது, வரி கொடாமை போன்றவற்றை நடத்துவதே இச் சட்ட மறுப்புப் போராட்டம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரபு நாடுகள் இதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று பலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத் கோரியுள்ளார்.

இம்மாதம் அல்ஜீரியாவில் நடைபெறவுள்ள அரபு நாடுகளின் உச்சி மாநாட்டில் இது சம்பந்தமாக முக்கிய முடிவு எடுக்கப்படவுள்ளது. (எ)

## சோவி. தேவாலயத்தில் அதிபர் றேகன்!

மாஸ்கோ, ஜூன் 1

அமெரிக்க அதிபர் றேகன், கிரெம்லின் அருகில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றுக்கு நேற்றுச் சென்று வழிபாட்டில் கலந்து கொண்டார்.

ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த அந்தத் தேவாலயம் இப்போதுதான் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் ஆட்சி வந்ததைத் தொடர்ந்து தேவாலயம், தொழிற்சாலையாக மாற்றப்பட்டது.

ஆலயம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீண்டும் சோவியத்தில் மத வழிபாட்டுச் சுதந்திரத்துக்கு புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளதைக் காட்டுவதாக உள்ளது என்று அதிபர் றேகன் சொன்னார்.

ஆலய பிஷப் அதிபரை வரவேற்றுப் பேசுகையில்,

சோவியத்தில் மக்களும் மதகுருமாரும் ஒன்று பட்டுழைப்பதாகத் தெரிவித்தார். (எ)

## சோவியத் வானில் மேற்கு ஜேர்மன் விமானம்

### மீண்டும் ஊடுருவல்

ஒஸ்லோ, ஜூன் 1

மேற்கு ஜேர்மனியில் இருந்து சென்ற விமானம் ஒன்று சோவியத் யூனியனின் ஆகாயப் பிராந்தியத்தினுள் இரண்டு தடவை ஊடுருவியது என்று நோர்வே அதிகாரிகள் அறிவிக்கின்றனர்.

வார இறுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

நோர்வே அதிகாரிகள் ஒஸ்லோ வந்திறங்கிய, அவ்விமானத்தில் இருந்து பைலட்டை கைதுசெய்து விசாரித்து விட்டு விடுவித்தனர். அவர் ஒரு ஆஸ்திரியப் பிரஜை என்று அறிவிக்கப்பட்டது.

சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் மேற்கு ஜேர்மனைச் சேர்ந்த மத்தியஸ் றூஸ்ட் என்பவர் சென்ற விமானம் ஓட்டிச் சென்று கிரெம்ளின் மாளிகையில் இறங்கினார் என்பதும்,

அதற்காக சோவியத் நீதிமன்றத்தினால் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார் என்பதும் தெரிந்ததே!

## சுயேட்சை அமைப்பிடம் இந்து ஆலய நிர்வாகம்

### சந்நியாசிகள் மகஜர்

சென்னை, ஜூன் 1

தமிழ் நாட்டில் உள்ள இந்து ஆலயங்களின் நிர்வாகம் சுயேச்சையான அமைப்பு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சுமார் 200 இந்து சந்நியாசிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று தமிழ்நாடு ஆளுநரைச் சந்தித்து இக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்தது.

இதற்காக இந்த சந்நியாசிகள் பாதயாத்திரையாக கன்னியாகுமரியில் இருந்து சென்னைக்கு வந்தனர்.

தற்போது இந்து ஆலய நிர்வாகம் தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத் திணைக்களத்திடம் உள்ளது. (எ)

### வெளி உலகில்

## போதைவஸ்து கடத்தல்; இராணுவ அதிகாரிகள் கைது

நியூயார்க், ஜூன் 1

பனாமாவில் இருந்து பத்து கிலோ போதைவஸ்துவைக் கடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று தொடர்பாக அமெரிக்கப் பொலிஸார் இராணுவ, விமானப்படைகளின் அதிகாரிகள் சிலரைக் கைது செய்தனர்.

அமெரிக்க விமானப் படை விமானம் ஒன்றின் மூலம் கொக்கெயின் என்ற போதைவஸ்துவை நியூயார்க்குக் கடத்திவர அமெரிக்க ராணுவ விமானப்படை அதிகாரிகள் சிலர் உதவினர் என்பது தெரியவந்திருக்கின்றது. (எ)

## சீனாவில் 49 பேர் பலி!

சீனாவின் வட பகுதியில் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 49 பேர் உயிரிழந்தனர்.

ஏழு பேர் உயிர் தப்பினர். ஒருவரின் நிலை கவலைக்கிடமானதாக உள்ளது.

இந்த ஆண்டில் மட்டும் இதுவரை சீனாவில் உள்ள சுரங்கங்களில் ஏற்பட்ட வெடிவிபத்துக்களில் 150 பேர் கொல்லப்பட்டனர்.

சட்ட விரோதமாக சுரங்கத் தொழிலில் ஈடுபடுவதைத் தடைசெய்ய சீன அரசு நடவடிக்கை எடுத்துவுள்ளது.

## ஈகுவடோரில் நெருக்கடி நிலை

ஈகுவடோர், ஜூன் 1

ஈகுவடோரில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அரசஊழியர் 140 சதவீத சம்பள உயர்வு கோரி பொது வேலை நிறுத்தம் ஒன்றை நேற்று ஆரம்பித்தனர். அதை முறியடிக்கவே அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டது. (எ)

## வடக்கு-கிழக்கில் தேர்தலை திணிக்க இதுகாலம் அல்ல

### பொத்துவில் விவசாயிகள் சம்மேளனம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம் ஜூன் 2

கடந்த கால சம்பவங்களால் பாதிக்கப்பட்டு தாங்கொணாத் துயரங்களுடன் வாழ்ந்து வரும் வடக்கு - கிழக்கு மக்கள் பகுதியில் தேர்தலைத் திணிப்பது பொருத்தமானதல்ல. இடைக்கால நிர்வாகத்தை நிறுவி, நிவாரண நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்று மக்கள் நிம்மதி அடைந்த பின்னரே தேர்தலை நடத்துவது சாத்தியமாக அமையும்.

பொத்துவில் தொகுதி விவசாயிகள் சம்மேளனம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இந்த மகஜரின் நகல் ஒன்று இந்திய உயர்ஸ்தானிகருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் தேர்தல்கள் மிக அண்மையில் நடைபெற உள்ளதாக பல்வேறு வகையில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

ஆனால் வடக்கு கிழக்கு வாழ் மக்களோ மரணங்களாலும், இழப்புகளாலும், பாதிக்கப்பட்டு தொடர்ந்து சங்கிலிக் கோர்வை போன்ற நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்நிலையில் நிர்மாணமும், மன நிறைவும் ஏற்பட்ட பின்பே மக்கள் தேர்தலைப் பற்றி சிந்திப்பார்கள்.

எனவே மாகாண சபை, தேர்தலையும், பொதுத் தேர்தலையும் நடத்த முன்பு வடக்கு-கிழக்கு இணைப்பை பிரகடனப்படுத்தி, இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும்.

இன்னும் வடக்கு, கிழக்குக்கான நிவாரணம் மற்றும் புனருத்தாரணங்களையும் பெற்றுக்கொண்ட பின்னரோ தேர்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. [இ-9]

## திருமலை-யாழ் பஸ் பயணத்துக்கு ஆசனப் பதிவு வசதி

திருகோணமலை, ஜூன் 2

திருகோணமலைக்கும் - யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் இ.போ.ச பஸ்களில் செல்வதற்காக பிரயாணிகள் முன் கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்யும் முறை திருகோணமலையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலை பஸ் நிலையத்தில் காலை 7-30 மணிமுதல் பிற்பகல் 2-30 மணிவரை ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் பிரயாணிகள் இவ்வாறு முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

தினமும் காலை 6 மணிக்கு பஸ் புறப்படும்,

இதே போன்று கொழும்புக்குச் செல்லும் பிரயாணிகளும் முன்கூட்டியே பஸ் நிலையத்தில் ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். (இ-150)

### சமய நிகழ்ச்சிகளில்

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர்கோவில் சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை நடைபெறும். இரவு தண்டிகை உற்சவமும் நடம்பெறும். (சி-5)

### மகாமாரி அம்பாள் ஆலயத்தில்

சுன்னாகம், ஜூன் 2

வரியப்புலம் மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகமும், ... வெள்ளிக்கிழமை நடைபெறும். (இ)



### பொய்யாமொழி

**குறள்:**

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

**பொருள்:**

ஆராய்ந்து எண்ணுவதற்கு எல்லை துணிவு கொள்வதே ஆகும்; அவ்வாறு கொண்ட துணிவு காலந்தாழ்த்து நிற்பது குற்றமாகும்.

## வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்த வேண்டும் -சிறிமா

கொழும்பு, ஜூன் 2

நாடு இன்றுள்ள கஷ்டத்தில் இருந்து மீள வேண்டுமாயின் வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறுகிய காலப் பயணம் ஒன்றை மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை ஜேர்மனி பயணமானார்.

அதற்கு முன்னர் அவர் பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு நெருக்கடியான நிலையில் உள்ளது. சந்தேகம், பயம், கண்ணீர், ஆகியவற்றைத்தான் மக்கள் மத்தியில் காணமுடிகிறது.

மக்கள் இவற்றிலிருந்து மீள இன்று எதிர்பார்ப்பது ஜனாதிபதித் தேர்தலையே. இந்த வருட இறுதியில் இத்தேர்தல் நடைபெற வேண்டும்.

மீண்டும் விரைவில் திரும்பி வந்து மக்களின் துன்பத்தைக் களையும் போராட்டத்தில் ஈடுபடுவேன்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (ஒ-எ)

### உடுப்பிட்டியில் ஹர்த்தால்

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று உடுப்பிட்டி இலங்கையில் அமைதிப்படையின் சுற்றிவளைப்பின் போது உயிரிழந்த சிலனும் போராளி தமிழீழ விடுதலைப் புலிகளின் உடுப்பிட்டிப்பகுதிப் பொறுப்பாளர் என இனங்காணப்பட்டார்.

இதன் காரணமாக கடந்த திங்கட்கிழமை நண்பகல் முதல் மாலை வரை உடுப்பிட்டி வட்டாரத்தில் முழு அளவில் கடையடைப்பும் ஹர்த்தாலும் மேற்கொள்ளப்பட்டன. (உ-16)

### நூலகம் மீண்டும் இயங்கும்

நெடுந்தீவு, ஜூன், 02

நெடுந்தீவு பிரதேச சபையால் புதிதாக அமைக்கப்பட்ட பொது நூலகக் கட்டடம் பொது மக்களின் உபயோகத்திற்கென எதிர்வரும் 16ஆம் திகதி திறந்துவிடப்படும் எனத் தெரிகிறது.

### மாணவர்களுக்கு பால்மா

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஸ்ரீராமகிருஷ்ணசாரதா சேவச்சிரமம் வாரம் தோறும் அளவாய் இந்து தமிழ்க்கலவன்பாடசாலை மாணவர்களுக்கு பால்மா வழங்கி வருகிறது. [சி]

### லங்கா சீமெந்து ஊழியர் உதவி

காங்கேசன்துறை ஜூன் 2

தெல்லிப்பழையில் அமைந்துள்ள விழிப்புலன் இழந்தோர் வாழ்வகத்துக்கு காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்கள் 21 ஆயிரத்து 12 ரூபாவை வழங்கியுள்ளனர்.

விழி புலன் இழந்த சிறார்கள் தங்கியிருந்து கல்வி கற்கவும், மற்றும் துறைகளில் அறிவை வளர்க்கவும் உதவுமுகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வாழ்வகத்திற்கு ஏற்கனவே தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. (இ-68)

### புத்தூர்வாசி கொலை

வடமராட்சி, ஜூன் 2

புத்தூர் வடக்கு வாசி ஒருவர் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் கடந்த வெள்ளியன்று சுட்டுக் கொல்லப்பட்டார் (ஒ-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
மணிப்புரி
பெனாரஸ்
காஞ்சிபுரம்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

# உதயன்

2 - 6 - 1988 வியாழக்கிழமை

சேட்டிங், சூட்டிங்ஸ்
குழந்தைகளுக்கான ஆடைகள்
சகல விதமான றெடிமேட்
ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்நகர்.

# வட்டக்கச்சியில்
## ஊரடங்கும் தேடுதலும்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வட்டக்கச்சிப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு,பலத்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

இப் பகுதியில் ஞாயிறன்று நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்து இப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகிறது

தேடுதலின் உச்சக்கட்டமாக ஆயிரக்கணக்கான அமைதிப்படையினர் நேற்று இப்பகுதியைச் சுற்றிவளைத்தனர்

இப் பகுதியில் உள்ள சகல பொதுமக்களும் குறிப்பிட்ட இடங்களுக்கு அழைத்து வரப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

எனினும் இச் செய்தி எழுதப்படும் போது கைதானோர் பற்றிய சரியான தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (ஓ 10)

### கூட்டம்

யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாணவர் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படவுள்ளது இக்கூட்டத்திற்கான ஒழுங்குகளை மருத்துவப் பீட மாணவர்கள் மேற்கொண்டுவருகிறார்கள் (ஓ-5

### கனரக...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

டது

இதே வேளை, யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ் நகரில் திடீர் வீதிச் சோதனைகள் இப்போது வழமையாகி விட்டன.

நேற்றும் பல சந்திகளில் இந்திய அமைதிப் படையினரின் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

திடீரெனச் சந்திகளுக்கு வரும் படையினர் அவ்வழியில் செல்பவர்களின் வாகனங்களில் 'பாஸ்' அடையாளக் கார்ட் ஆகியவற்றைச் சோதனை செய்கின்றனர்.

இப்படியான சோதனைகள் பிரதான வீதிகளின் சந்திகளில் நடைபெறும் போது அவ்வழியால் செல்லும் பஸ்கள், மினிபஸ்கள் ஆகியவற்றில் பயணம் செய்யும் மக்களை இறக்கியும் சோதனை நடைபெறுகிறது.

இப்படியான திடீர் சோதனை கடந்த சில தினங்களாக வழமை நிகழ்ச்சிகளாகி விட்டன. (ஓ-க-51)

### பருத்தித்துறையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்கள் மினிபஸ்கள், தனியார் வாகனங்கள் யாவும் அவ்விடத்தை விட்டு அகன்றன.

பருத்தித்துறையை நோக்கிச் சென்ற வாகனங்கள் யாவும் நகருக்குள் செல்லாமலே திரும்பிச்சென்றன.

சற்று நேரத்தின்பின் அமைதிப்படையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சம்பவத்தின் பின்னர் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு வீதிக்கு வீதி விசாரணைக்காகத் தலையாட்டி முன் நிறுத்தப்பட்டார்கள்.

கிரனெட் வெடிப்பு, துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்களின் பின்னர் எவ்வித போக்குவரத்தும் நடக்கவில்லை; நகரச் சுற்றுடலில் உள்ள வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் யாவும் மூடப்பட்டன. [ஓ-160]

### விசேட

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மகாசிவம் உதயனுக்குத் தெரிவித்தார்

அவர் இதுபற்றி மேலும் தகவல் தந்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1987 டிசம்பரில் பரீட்சை தடைப்பட்டது பற்றிய உத்தியோகபூர்வமான அறிக்கைகள் எதுவும் இதுவரை கல்வி அமைச்சுக்குக் கிடைக்கவில்லை.

இந்த விடயம் தொடர்பான அறிக்கை ஒன்றை பரீட்சை ஆணையாளரிடம் கோரி, பரீட்சை தடைப்பட்டது ஊர்ஜிதப்படுத்தப்பட்டால அமைச்சின் அனுமதியைப் பெற்று —பரீட்சை நடத்துவதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்வதாக திரு விஜயமானே உறுதி அளித்துள்ளார் —என்று தெரிவித்தார். [அ8]

### பந்த் நாடு திரும்பினார்

இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் நேற்றுக்காலை புதுடில்லி திரும்பினார்.

அமைச்சர் காமினி திஸநாயக்கா கூட்டுப் படைத்தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்கா ஆகியோர் அமைச்சர் பந்த்தை விமான நிலையத்தில் வைத்து வழியனுப்பி வைத்தனர்.

### வெளிநோயாளர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது நோய்களைப் பரிசோதித்துச் சிகிச்சை பெறலாம்.

ஆனால் வார்ட்டுகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதியைச் சிறிய வைத்திய சாலைகளில் பெற்றுக்கொள்ள முடியாது. அதனாலேயே இங்கு வார்ட்டுகளுக்கு விசேட கவனம் செலுத்த வேண்டி உள்ளது.

வார்ட்டுகளில் கடமையாற்றுவதற்குப் போதுமான டாக்டர்கள் இல்லை. அதனால் வெளிநோயாளர் பிரிவின் மேலதிக டாக்டர்களை சேவைக்கு அமர்த்த முடியாத நிலை இருக்கிறது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாகவும், தமது சொந்தக் காரணங்களிற்காகவும் டாக்டர்களில் பலர் இங்கு கடமையாற்ற தயங்குகின்றனர் என்பது தெரிந்ததே. (அ-5)

### அலம்பில்...

யினர் விசேட இலக்கங்களைக் கொண்ட அடையாளக் கார்ட்டுகளை வழங்கியுள்ளனர்

இவர்கள் கிராமங்களை விட்டு வெளியேறும் போது தமது இலக்கங்களை அமைதிப்படை 'சென்றி' நிலையில் பதிந்துவிட்டு வெளியே செல்ல வேண்டும்.

மீண்டும் கிராமத்துக்கு திரும்பி வரும் பொழுது தமது இலக்கங்களை அமைதிப்படையினருக்கு தெரிவிக்க வேண்டும்

வாகனங்களுக்கும் அமைதிப்படையினர் இதே நடவடிக்கையை அமுல்படுத்தி வருகின்றனர் (ஓ-10)

### கொழும்பில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெட்டிகள் கவிழ்க்கப்பட்டுப் பின்னர் தீயிடப்பட்டன.

எத்தனை பேர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர் என்பது தெரியவில்லை

நுவரெலியாவில் அரசு அலுவலகம் ஒன்றின் மீது கிரனெட் தாக்குதல நடத்தப்பட்டது

மூன்று பொலிஸாரும் இரண்டு அரச ஊழியரும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்தனர்.

தென்இலங்கை வன்செயல்களில் நேற்று குறைந்தது 5பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர் பொலிஸ்காரர்.

20க்கு மேற்பட்ட அரசு அலுவலகங்கள், ஒரு ஆரம்ப நீதிமன்றக் கட்டடம் எரிக்கப்பட்டன.

பஸ்கள், லொறிகள், தனியார் வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டன மின்சார டிரான்ஸ்போமர்கள் பல இடங்களில் எரிக்கப்பட்டன. அதனால் பரவலாக மின்சாரத் தடை பல இடங்களில் ஏற்பட்டது

ரயில்சேவை சீர்குலைந்தது

பம்பலப்பிட்டியை அடுத்த பகுதியில் குண்டு ஒன்று வெடித்ததனால் சில கடைகள் தீப்பற்றிக் கொண்டன.

[ஊர்ஜிதம் செய்யப்படவில்லை].

மேலும் பாணந்துறை, மொரட்டுவைப் பகுதிகளில் சில கடைகள் தீமூட்டி எரிக்கப்பட்டன. பஸ்களும் எரிக்கப்பட்டன. படையினர் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

இந்தச் சம்பவங்களை அடுத்து கொழும்பு நகர்ப் பகுதியில் பதற்ற நிலை உருவாகியது.

இது இவ்வாறிருக்க நேற்று யாழ்தேவி ரயிலின் வவுனியாவுக்கான சேவை நடத்தப்படவில்லை.

பொல்காவலை ரயில் நிலையம் விஷமிகளினால் தீவைக்கப்பட்டது மதவாச்சியை அண்மித்த இடத்தில் பாலமொன்று தகர்க்கப்பட்டது.

[அ-எ-10-9]

திருமலையில் உள்ள

# காட்டுப் பகுதிகளில் படையினர் தேடுதல்!

திருகோணமலை, ஜூன் 2

அனுராதபுரச் சந்தியிலிருந்து கன்னியாவரையிலான காட்டுப் பகுதிகளில் இந்திய அமைதிப் படையினர் பலத்த தேடுதல்களை மேற்கொண்டனர். அந்தப் பகுதிகளில் இரண்டு நாட்கள் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்றது

இதனால் இப்பகுதியிலுள்ள மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளானார்கள்.

இதேபோன்றுமூதூர்ப் பிரதேசத்திலுள்ள காட்டுப் பகுதிகளிலும் பலத்த தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இதேவேளை செல்வநாயகபுரம், அன்புவழிப்புரம் ஆகிய தமிழ்ப்பகுதிகளும் இந்திய அமைதிப் படையினரால் கடந்த வார இறுதியில் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

எனினும் எவரும்கைது செய்யப்படவில்லை. பலர் தடுத்து வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். [ஓ-150]

## இவர்களும் சந்தித்தனர்

மாஸ்கோ, ஜூன்2

சோவியத் யூனியனில் வெளியேற அனுமதி மறுக்கப்பட்ட யூதப் பிரசைகள் அமெரிக்க அதிபர் றெஹனல்ட் றேகனைச் சந்தித்தனர்,

இச்சந்திப்பு மாஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றது.

சோவியத் அரசியல் அதிருப்தி கொண்டவர்கள் சிலரும் திரு றேகனை அப்போது சந்தித்தனர்.

சோவியத் தலைவர் கோர்பச்சேவைச் சந்தித்த பின்னரே இச்சந்திப்பு இடம் பெற்றது (ஓ-எ)

## மரண அறிவித்தல்கள்

### செல்வராணி சரவணமுத்து

கொக்குவில் கிழக்கு, பொற்பதி றோட், சாந்தி நிலையத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் [வைத்தீஸ்வர வித்தியாலயம்] அ. சரவணமுத்துவின் மனைவி செல்வராணியின் ஈமக்கிரியைகள் 2-6-88 வியாழக்கிழமை பி. ப 3 மணியளவில் நடைபெற்று கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் தருபவர்:

அ. சரவணமுத்து

2-6-88 [4030]

### திருமதி நடராசா இராசம்மா (பூமணி)

ஊர்காவற்துறை கரம்பன் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நடராசா இராசம்மா (பூமணி] 31-05-1988 இல் காலமாகிவிட்டார். இவர் ஓய்வு பெற்ற துறைமுக அதிகாரசபை ஊழியர் நடராசாவின் அன்பு மனைவியும் ராஜகுமார் (இலங்கை துறைமுக அதிகார சபை) Dr சிவபாலன் (District Hospital Pallebedda) நகுலாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயாரும் ரூபவதி, தயாவதி, கெங்காதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிமலன் (அமெரிக்கா) விஜிதா, றஜனி, வசந்திகுமாரி, புஸ்பகுமார், சுரேஸ்குமார், சிறீதரன் [ஜேர்மனி] சுபோதினி, சிவந்தினி, [City Medicals Jaffna) குமுதினி, ஜெயந்தினி, விஜேதினி, ரதினி, ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவர். அன்னாரின் பூதவுடல் 2-06-88 வியாழக்கிழமை பிற்பகல் 3 00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கரம்பன் கிழக்கு கோட்டை வாசல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரம்பன் கிழக்கு.

தகவல்
எஸ். கெங்காதரன்

[4034]

### இராசேந்திரம் இரசிகரன்

நயினாதீவு 7 ஆம் வட்டாரம் நாவலடி ஒழுங்கையில் வசிக்கும் இராசேந்திரம் அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வன் இரசிகரன் சிவபதம் அடைந்து விட்டார். இவர் குருபரன் [மக்மிலன் புத்தகசாலை யாழ்ப்பாணம்] யாழினி மாலினி, பிரபாகரன், இன்பாகரன், செந்தில் குமரன், செந்தூரன் ஆகியோரின் சகோதரருமாவார். ஈமக்கிரியைகள் நயினாதீவில் இன்று [2-6-88] நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:- கு ஸ்ரீஸ்கந்தராசா

[4037]

உடனடிவேலைவாய்ப்பு

**Kuwait Cleaners - 35K. D.**

2½ மாதங்கள் ஆகும்
உடன்படிக்கை 2 வருடங்கள்

**Vacancies in Saudi Arabia**

1. Cleaners - 300 - 350 Riyals (Hospital, Schools, Airport)
2. Masons - 550 Riyals
3. Carpenters - 550 ,,
4. Plumbers - 550 ,,
5. Electricians - 550 ,,
6. Heavy Vehicle Drivers 700 ,,
7. Heavy Mechanics - 650 ,,
8. A/C Mechanics OPEN VISA
9. Sign Board Painter - 1 - 800 ,,
10. Audio Video Technician - 1 - 800 ,,

★ உடன்படிக்கை 3 வருடங்கள்
★ இலவச உணவும் தங்குமிடமும் அல்லது 100 Riyals அலவுன்ஸ் உணவுக்கு
★ இலவச மருத்துவ சிகிச்சை

Cleaners க்கு இருகிழமைகளில் பயணம். அதாவது 15-06-88 க்கு முன் பயணம் செய்யலாம். ஆதலால் முற்பணம் அவசியம்.

Passport வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

நிபந்தனை:- விசா பெற்றுக் கொடுத்த பின், அறிவிக்கும் காலத்தில் பணத்தைச் செலுத்தி வெளிநாடு செல்லத் தவறினால் முற்பணமோ கடவுச் சீட்டையோ நீங்கள் திரும்பப் பெறமுடியாது. செல்ல முடியும் என்றால் வாருங்கள் அல்லது வந்து நேரத்தை வீணாக்காதீர்கள். நம்பிக்கை இருந்தால் வாருங்கள்.

காலை 7 மணி தொடக்கம் பி.ப. 1 மணி வரை

**M. Shannmugaratnam**
(யாழ். கல்லூரியின் பழைய மாணவன்)
Ex S. I of Police
Sivankovillady, SITHERNKERNY. [N. P]

அல்லது பின்வருவோருடன் தொடர்பு கொள்க:-

1. V. கனகலிங்கம்
7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
2. அமிர்தலிங்கம் மாஸ்டர்
சில்க் மகான், சண்டிலிப்பாய்.
3. சிறீ (Honda)
183, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
4. நோபிட் [ஜோர்ச்]
ராஜா வெல்டிங் வேர்க்ஸ், சங்கானை றோட், அச்சுவேலி.

இவர்களுடனே பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாம்

[4029]

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
திரு. கிருஷ்ணசாமி நாகராசாப்பத்தர்

தோற்றம் : 11 - 1 - 1949
மறைவு : 17 - 5 - 1987

திதி : 3 - 6 - 1988

என்றென்றும் அன்புடன் எமக்கெல்லாம் தந்தையாய் விளங்கியும் வீட்டுத்தலைவனாய் இருந்தும், வரும் துன்பம்தனை நீக்கி எம்மை வளர்த்தாளாக்கிய வாழ வழிகாட்டிய அன்புத்தந்தையே என்று அன்புத்தாய், சகோதரர்களும்- அருமைமனைவி,பிள்ளைகளும்- மைத்துனரும் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குறிப்பு : எதிர்வரும் 3-6-1988 வெள்ளிக்கிழமை வரும் சதுர்த்தியில் அமரரின் திவச வைபவம் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.
[4351]

இப்படிக்கு
மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

வெளிவந்துவிட்டது

# ஆக்கம்

3 வது இதழ்

இம்மாத இதழில்

* இலங்கை அரசிறையில் இறக்குமதி வரிகளின் சார்பளவன பங்களிப்பு
★ உபநிடதச் சிந்தனை
★ விஞ்ஞானத்தில் அவதான முறைகளும் அவற்றின் பயன்பாடுகளும்.
* வலுவேறாக்க கோட்பாடும் நடைமுறையும்.
★ நெடுநல் வாடை
★ பொருளியலில் சில சேமிச் சொற்கள்

வெளியீடு:
(பட்டப்படிப்புகள் கல்லூரி)
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லா புத்தகசாலைகளிலும் பெறுக் கொள்ளலாம்
(C5288)

விதவைகள், திக்கற்ற பெண்கள்
சுய உதவி தொழிற் திட்டம்

தமிழ்பகுதிகளில் அண்மைய வன்செயல்களால் பாதிக்கப்பட்டு குடும்ப தலைவரை இழந்த திக்கற்ற பெண்கட்கும், விதவைகட்கும் தொழிற் பயிற்சி அளிக்கவும். அவர்கட்கு சுய உதவி தொழிற் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளித்து அவர்களின் துயர் துடைக்கவும் ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டு, அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் பெண்களும், கைப்பணி செய்ய கூடிய அங்கவீனர்களும் தமது விபரங்களை எமக்கு அனுப்பி உதவவும்

இத்திட்டத்தில் அப்பளம் மெழுகுவர்த்தி பிடி மற்றும் ஆடை தைத் தொழில ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்க கூடியவர்களின் விபரமும் அனுப்பி உதவின் நன்றி உடையோம்.

புனர்வாழ்வு
உதவி நிறுவனங்கள் ஒன்றியம்
C/o 222 உதயன்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

[C-5280]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 2-06-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and published by New Uthayan Publications (Pvt) Ltd. 92/2, Navalar Road, Jaffna on Thursday, 2 nd June 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org